## தலைப்பு 117 - நெடுஞ்சாலைகள் அமைச்சு

----------------------------------------------------------------------------------------

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

நெடுஞ்சாலைகள் அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2021 யூன் 25 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 09 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நெடுஞ்சாலைகள் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) முன்னைய ஆண்டில் நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சின் கீழ் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தது என கூற முடியாது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் நெடுஞ்சாலைகள் பிரிவிற்கு உரியதாக என்னால் முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரைகள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களினூடாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளை தயாரித்தல், நிதியேற்பாடுகளை மாற்றுதல், குறைநிரப்பு பாதீட்டு மதிப்பீடுகளினூடாக நிதியேற்பாட்டினை பெற்றுக்கொள்ளல் மற்றும் பயன்பாடு, நிதியேற்பாடுகளை பயன்படுத்தல், சேமிப்புகள் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் மதிப்பீடுகளை தயாரிப்பதில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக ஆரம்ப செலவின மதிப்பீடுகள் மற்றும் திருத்தப்பட்ட செலவின மதிப்பீடு ஆகியவற்றுக்கிடையிலான விலகல் 25 சதவீதம் முதல் 1750 சதவீதம் வரையிலும் காணப்பட்டது. | ஆரம்ப செலவின மதிப்பீடுகள் மற்றும் திருத்தப்பட்ட செலவின மதிப்பீடுகளுக்கிடையிலான விலகலுக்கு, கொவிட் 19 தொற்றுநோய் நிலமை, எதிர்பார்த்தவாறு செலவினம் ஏற்படாமை, எதிர்பாராத வகையில் செலவினம் மேற்கொள்ள நேர்ந்தமை, அமைச்சின் உத்தியோகபூர்வ இல்லம் நெடு நாளாக மூடப்பட்டிருந்தமை, அமைச்சின் பெயர்ப்பலகையை மாற்றியமைத்து பொருத்துவதற்காக எதிர்பாராத செலவினமொன்றை மேற்கொள்ள நேர்ந்தமை, கோரப்பட்ட அளவினை விட அதிக நிதியேற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்தமை, நிதியேற்பாடுகள் போதியளவில் அங்கீகரிக்கப்படாமை ஆகிய 17 காரணங்கள் தாக்கமளித்திருந்தன. | அடிக்கடி மாற்றத்திற்கு உள்ளாகாத வகையில் ஆண்டுக்கான செலவின மதிப்பீடுகள் உரிய முறையில் எதிர்வுகூறக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 29.63 மில்லியன் கூட்டுப் பெறுமதியான தேறிய நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த 17 செலவின விடயங்களுக்குரியதாக பொருத்தமான எதிர்வுகூறலின்றி மதிப்பீடுகள் | 17 செலவின விடயங்களுக்குரிய 25%-72% வரையான அளவில் சேமிப்பு ஏற்படுவதற்கு கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமை, எதிர்பார்த்தவாறு செலவினம் மேற்கொள்ள நேராமை, அமைச்சின் உத்தியோகபூர்வ | பொருத்தமான எதிர்வுகூறலுடன் செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தயாரிக்கப்பட்ட காரணத்தால் 25 சதவீதம் முதல் 72 சதவீதம் வரையான வீச்சினுள் பரம்பியிருந்த ரூபா 14.43 கூட்டுப் பெறுமதியான தேறிய நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. | இல்லம் அதிக காலம் மூடப்பட்டிருந்தமை, இடைக்கொடுப்பனவுச் சான்றிதழ்கள் கணக்கு வைக்கப்படாமை, போதியளவான கட்டுநிதி கிடைக்காமை மற்றும் அங்கீகரித்த நிதி மிகைப்பட்டமை ஆகியன தாக்கமளித்திருந்தன. | |
| (இ) | அமைச்சினால் பாதீட்டு நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த 20 செலவின விடயங்களுக்காக ரூபா 51,575.99 மில்லியன் நிதியேற்பாட்டினுள், அந்த செலவினத்தினுள் செலவினம் மேற்கொள்ளாது 50 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலுமான ரூபா 45,388.06 மில்லியனான நிதியேற்பாடு நிதிப்பிரமாணம் 66/69இன் ஊடாக வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | இதற்காக கொவிட் 19 தொற்றுநோய் நிலமை, எதிர்பார்த்தவாறு செலவினம் ஏற்படாமை, அமைச்சின் உத்தியோகபூர்வ இல்லம் மூடப்பட்டிருந்தமை, பழுதுபார்த்தல்கள் இடம்பெறாமை, ஒப்பந்த மற்றும் மதியுரைச் சேவைகள் மூலம் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டமையால் நிதியேற்பாடு தேவைப்படாமை, கோரப்பட்ட அளவினை விட அதிக நிதியேற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்தமை மற்றும் நிதியேற்பாடு போதுமானதாக இல்லாதிருந்தமை போன்ற விடயங்கள் தாக்கமளித்திருந்தன. | சரியாக இனங்காணப்பட்ட செலவினத் தேவைப்பாடுகளுக்கு மாத்திரம் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 17 செலவின் விடயங்களுக்குரியதாக நிதிப்பிரமாணம் 66/69இன் கீழான மாற்றல்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 22,838.64 மில்லியனான கூட்டுப் பெறுமதியுடைய மேலதிக நிதியேற்பாடுகளில் ரூபா 19,296.68 மில்லியன் பயன்படுத்தப்படாத காரணத்தால் 50 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. | எதிர்பார்த்த பட்டியல்களை உரிய நேரத்தில் செலுத்துவதற்கு சமர்ப்பிக்கப்படாமை, எதிர்பார்த்தவாறு செலவினம் ஏற்படாமை, கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட IPC கணக்கு வைக்கப்படாமை, போதியளவான கட்டுநிதி கிடைக்காமை மற்றும் கொவிட் - 19 தொற்றுநோய் நிலமை காரணமாக பணிகளை பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்படல் போன்ற காரணங்கள் தாக்கமளித்திருந்தன. | - மேற்படி - |

## 2.2 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம், பொறுப்புகள் தொடர்பான பதிவேட்டினை நாள்தோறும் பரிசோதித்து தீர்ப்பனவு செய்யாத காரணத்தால் 2020 திசெம்பர் 31ஆந் திகதியின் பின்னர் தீர்க்கப்படாத பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 6,477 மில்லியன் ஆகும். | திறைசேரியிலிருந்து வருடாந்தம் கிடைக்க வேண்டிய கட்டுநிதி உரிய காலத்தில் உரிய அளவில் கிடைக்காத காரணத்தால் தீர்ப்பனவு செய்யப்படாத பொறுப்புகள் ரூபா 6,477 மில்லியன் எஞ்சியிருந்தது. | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 94 மற்றும் 2017 ஏப்ரல் 21 ஆந் திகதிய 255/2017ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் அறிவுரைகளுக்கமைய ஏனைய விதத்தில் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ள சந்தர்ப்பம் நீங்கலாக வருடாந்த மதிப்பீடுகளுக்கு நிதியேற்பாட்டினை விஞ்சி பொறுப்புகள் ஏற்படுத்தப்படக்கூடாத போதிலும், மொத்த நிதியேற்பாட்டினை விஞ்சி ரூபா 91.5 மில்லியன் வரையிலும் கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாதிருக்க குறித்து வைத்துக்கொள்கின்றேன். | நிதிப்பிரமாணம் 94 மற்றும் 2017 ஏப்ரல் 21 ஆந் திகதிய 255/2017ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் அறிவுரைகளுக்கமைய செயற்பட வேண்டும். |

## 2.3 வைப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 571(3) இன் பிரகாரம் வைப்புக் கணக்கொன்றில் நிச்சயமற்று வைத்துள்ள பணத்தை சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான | செயற்திட்ட பணிப்பாளரின் பரிந்துரைகளைப் பெற்று 2021 சனவரி மாதம் அரச வருமானத்திற்கு மாற்றப்பட்டது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் காலம் தாமதிக்காது தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

வகையில் உரிய கணக்கிற்கு அல்லது அரச வருமானத்திற்கு செலவு வைத்தல் அல்லது கூடிய விரைவில் மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சில் 2 முதல் 5 வருடங்களுக்குிடையில் ரூபா 310,719 கூட்டுப் பெறுமதியுடைய வைப்புக்களும் 5 வருடங்களை விஞ்சிய ரூபா 25,000 ஆன வைப்புக்களும் 2020 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள் பின்வருமாறு பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் - 760 | வருடாந்த பொருள் மெய்மையாய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்ட பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள் தொடர்பில் உரிய பிரிவுகளுக்கு கடிதங்கள் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணங்களுக் கமைய செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2017 திசெம்பர் 21ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க | அமைச்சிற்கு இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ள போது வாகனங்களை புதிய அமைச்சின் | எதிர்காலத்தில் அதன் பிரகாரம் செயற்படுவதற்கு குறித்து வைத்துக்கொள்கின்றேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 02(ii) பந்தி | பெயரில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சின் 25 வாகனங்கள் தொடர்பில் சுற்றறிக்கையின் அறிவுரைகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | |

## 2.5 கட்டுநிதி மீதிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் விரிவான திரண்ட பரீட்சை மீதியின் பிரகாரம், திறைசேரிக் கட்டுநிதி பெறுவனவு ரூபா 53,516,251,279 மற்றும் திறைசேரிக்கு தீர்ப்பனவு செய்யப்பட்ட கட்டுநிதி ரூபா 2,137,785,708 ஆகும். அதன் பிரகாரம், நிதிச் செயலாற்றல் கூற்றில் கட்டுநிதிப் பெறுவனவு ரூபா 51,378,465,571 ஆக காணப்பட வேண்டிய போதிலும், அது ரூபா 53,516,251,279 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | தாங்களால் சுட்டிக்காண்பிக்கபட்டுள்ளவாறு எதிர்காலத்தில் திறைசேரியிலிருந்து கிடைத்த கட்டுநிதியில் திறைசேரிக்கு தீர்க்கப்பட்ட கட்டுநிதித் தொகையினைக் கழித்து, நிதிச் செயலாற்றல் கூற்றில் கட்டுநிதி பெறுவனவாக பெறுமதியினை உள்ளடக்குவதற்கு குறித்து வைத்துக்கொள்கின்றேன். | திறைசேரியிலிருந்து கிடைத்த கட்டுநிதி பெறுமதி உரிய முறையில் பதிவு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிச் செயலாற்றல் கூற்றில் 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான கட்டுநிதி மீதி நட்டம் ரூபா 174,921,023,403 ஆக காணப்பட வேண்டிய போதிலும், அது ரூபா 2,141,059,758 தொகை குறைவாக ரூபா 172,779,963,645 நட்ட மீதியொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் திறைசேரியிலிருந்து கிடைத்த கட்டுநிதியில் திறைசேரிக்கு தீர்க்கப்பட்ட கட்டுநிதித் தொகையினைக் கழித்து, நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த வெளியீட்டினை (Outcome) பெற்றுக்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திருத்திய செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் 12,225 கி.மீ. நீளமான தேசிய நெடுஞ்சாலைகள், 4,254 பாலங்கள் மற்றும் 12 மேம்பாலங்கள் ஆகியவற்றின் பராமரிப்பு பணிகளுக்குரிய 100 சதவீதமான பௌதீக இலக்கினை அடைந்துகொள்வதற்காக திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டினுள் 7 மாகாணங்களை உள்ளடக்கி 307 கி.மீ. அளவில் மணல் கலந்த தாரினை பூசுதல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது. | 2020ஆம் ஆண்டின் போது 307 கி.மீ. நீளமான வீதிகளில் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளின் கால அடிப்படையிலான பராமரிப்பின் கீழ் மணல் கலந்த தார் பூசுதல், துவாரங்களை அடைத்தல் மற்றும் முன்கலவையை இழைத்தல் ஆகியன மேற்கொள்ளப்பட்டுள்ளன. | ஆண்டினுள் பராமரிப்பதற்குள்ள வீதிகள் வகைப்படுத்தப்பட்டு திட்டவட்டமாக இனங்காணப்பட வேண்டும். |
| (ஆ) | திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், வாகனங்கள் போக்குவரத்து முகாமைத்துவ செயற்திட்டத்தின் 8 பணிகளிடையே பன்னிப்பிட்டிய மேம்பாலத்தின் நாற்சந்தியின் வீதி சமிக்ஞை கட்டமைப்பினை மேம்படுத்தல், பன்னிப்பிட்டிய பாதசாரிகளை கடவையை தயாரித்தல் மற்றும் களனிப் பல்கலைக்கழகத்தின் அருகாமையிலுள்ள பாதசாரிகளை கடவையினை தயாரித்தல் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. | 2020ஆம் ஆண்டு முதற் காலாண்டில் COVID - 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக உற்பத்தியில் ஏற்பட்ட தாமதம் காரணமாக TLS உதிரிப்பாகங்கள் சீனாவிலிருந்து கிடைக்காமையால் மேற்படி செயற்திட்டங்கள் அனைத்தும் தாமதமாகியிருந்தது. | இலக்கிடப்பட்ட பௌதீக செயன்முன்னேற்றத்தினை அடைந்துகொள்ள தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | புதிய களனி பாலம் முதல் ராஜகிரிய ஊடாக அத்துருகிரிய வரையிலும் நிர்மாணிக்கப்படும் வீதி செயற்திட்டத்தின் கீழ் 2020ஆம் ஆண்டினுள் 347 காணித் துண்டுகளை கைப்பற்றுவதற்கும், 330 குடும்பங்களை மீளக் குடியமர்த்துவதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 97 காணித்துண்டுகள் மாத்திரம் சுவீகரிக்கப்பட்டிருந்ததுடன், எந்தவொரு நபரும் மீளக் குடியமர்த்தப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டினுள் இந்த செயற்திட்டத்திற்கு செலவிடப்பட்டிருந்த ரூபா 75.95 மில்லியனில் ரூபா 69.84 மில்லியன் செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவிற்காக செலவிடப்பட்டிருந்தது. | 2020ஆம் ஆண்டினுள் எதிர்பார்த்த பௌதீக செயன்முன்னேற்றத்தழனை அடைந்துகொள்ள முடியாமைக்கு நாடு முழுவதும் காணப்பட்ட தொற்றுநோய் நிலமை காரணமாக அமைந்திருந்தது. | இலக்கிடப்பட்ட பௌதீக செயன்முன்னேற்றத்தினை அடைந்துகொள்ள தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், நெடுஞ்சாலைகளை அகலமாக்குதல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அடையப்பட்ட பௌதீக இலக்குகள் தீர்மானிக்கப்பட்டிராமையால், நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றல் மட்டத்தினை அளவிட முடியாதிருந்தது. | 2020ஆம் ஆண்டு நிலவிய கொவிட் - 19 தொற்றுநோய் நிலமை காரணமாக ஒப்பந்ததாரர்களுக்கு நிர்மாணப் பணிகளை இயல்பாக பேணிச்செல்ல முடியாதுள்ளது. | ஆண்டினுள் அடையப்படவேண்டிய பௌதீக செயன்முன்னேற்றம் திட்டவட்டமாக தீர்மானிக்கப்பட வேண்டும். |
| (உ) | தேசிய நெடுஞ்சாலைகளில் அமைந்துள்ள சேதமடைந்த / உடைந்த பாலங்களை மீள நிர்மாணித்தல் / பழுதுபார்க்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டினுள் வலுவூட்டல் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய 50 பாலங்களில் 19 பாலங்களின் புனரமைப்புப் பணிகள் மாத்திரம் நிறைவு செய்யப்பட்டிருந்தன. | கிடைத்த நிதியேற்பாடு போதாமை மற்றும் தொற்றுநோய் நிலமை காரணமாக நிர்மாணப் பணிகளில் செயன்முன்னேற்றம் குறைவடைவதற்கு தாக்கம் செலுத்தியிருந்தது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | இலக்கிடப்பட்ட பௌதீக செயன்முன்னேற்றத்தினை அடைந்துகொள்ள தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.2 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்

### 3.2.1 இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆரம்பத் திட்டத்தின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தினால் 53 பொதிகளின் கீழ் வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் மேல் மாகாணங்களின் தேசிய நெடுஞ்சாலைகள் 27 இன் 340 கிலோ மீட்டர்கள் மற்றும் 1,405 கிலோ மீட்டர் கிராமிய வீதிகள் மற்றும் 3,400 கிலோ மீட்டர் வீதிகளை புனரமைப்பதற்கு எதிர்பார்த்திருந்த போதிலும், 2020 திசெம்பர் 31ஆந் திகதியளவில் 27 தேசிய நெடுஞ்சாலைகளின் 319.96 கிலோ மீட்டர்கள் மற்றும் 1,349 கிலோ மீட்டர் கிராமிய வீதிகள் மற்றும் 3,313.16 கிலோ மீட்டர் வீதிகளின் புனரமைப்பிற்கரிய ஒப்பந்தங்கள் மாத்திரம் கையளிப்புச் செய்யப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். | நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்பத் திட்டத்திற்கமைய செயற்படல் மற்றும் கால எல்லைகளுடனான இலக்குகளை அடைந்துகொள்வதற்கு உரிய நடடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | கையளிப்புச் செய்யப்பட்ட புனரமைப்பு நடவடிக்கைகளில் 25.05 கிலோ மீட்டர்கள் ஒட்டுமொத்த நீளமுடைய 13 கிராமிய கிராமிய வீதிகளில் 2020 திசெம்பர் 31ஆந் திகதி நிறைவு செய்யப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. மேலும், தற்போது புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் எஞ்சிய வீதிகளிடையே 2020 திசெம்பர் 31ஆந் திகதியளவில் 39.97 கிலோ மீட்டர் தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் 731.62 கிலோ மீட்டர் கிராமிய வீதிகளின் பணிகள் மாத்திரம் நிறைவு செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் கையளிக்கப்பட்ட தேசிய மற்றும் கிராமிய வீதிகளின் செயன்முன்னேற்றம் இந்த வீதிகளின் நீளத்தில் 21.93 சதவீதம் மாத்திரம் ஆகும். | இணங்குகின்றேன். | நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்பார்த்த இலக்குகளை இடைந்துகொள்வதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பயன்படுத்தப்படாத கடனின் அடிப்படையில் மீளாய்வாண்டினுள் கடப்பாடுகள் கட்டணமாக ரூபா 243.48 மில்லியன் சிக்கனமற்ற முறையில் முகவர்களுக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான திரண்ட கடப்பாடுகள் கட்டணம் ரூபா 449.51 மில்லியன் ஆகும். | உடன்படிக்கையின் பிரகாரம் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் அறவிடப்படும். | எதிர்பார்த்த மொத்தக் கடன் தொகையையும் திட்டமிடப்பட்டவாறு பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2014 இன் 33ஆம் இலக்க நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், அனைத்து வெளிநாட்டு ஒப்பந்ததாரரும் இலங்கையில் இனங்காணப்பட்ட நிர்மாணப் பணிகளில் ஈடுபடுவதற்கு முன்னர் ஒப்பந்ததாரராக நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் தற்காலிக பதிவினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். எவ்வாறான போதிலும், இந்த தேவைப்பாட்டினை கருத்திற்கொள்ளாது செயற்திட்டத்தினால் 09 ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தங்கள் கையளிப்புச் செய்யப்பட்டிருந்தன. | ஆசிய அபிவிருத்தி வங்கியின் வழிகாட்டல்களில் இந்த நிபந்தனைகள் காணப்படாததுடன், ஒப்பந்ததாரர்களால் தனித்தனியாக நிர்மாண மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்துள்ளனர். | 2014இன் 33ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட வேண்டும். |
| (உ) | நிகழ்ச்சித்திட்டத்தின் திட்டவட்டமான ஒப்பந்த நிபந்தனைகளுக்கமைய, ஒப்பந்ததாரரால் சமர்பிபிக்கப்பட வேண்டிய இடைக் கொடுப்பகவுச் சான்றிதழின் ஆகக் குறைந்த பெறுமதி ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுமதியில் 1.5 சதவீதமாக காணப்படல் வேண்டும். எனினும், மீளாய்வாண்டினுள் ஆக்க குறைந்த எல்லையினை விடக் குறைவான பெறுமதியுடனான 259 இடைக் கொடுப்பனவுச் சான்றிதழ்கள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. | கொவிட் 19 தொற்றுநோய், சாதகமற்ற காலநிலை, மூலப்பொருட்களை பெற்றுக்கொள்வதிலான சிரமங்கள் ஆகியவற்றின் காரணத்தால் உரிய செயலாற்றல் அடையப்பட்டிராததுடன், சேவை வழங்குநரால் ஒப்பந்ததாரரின் காசுப்பாய்ச்சலினை பேணுவதற்காக இடைச் சான்றிதழை செலுத்தும் போது ஆகக் குறைந்த பெறுமதி, ஒப்பந்த பெறுமதியில் 1.5% இற்கு குறைவான பெறுமதி காண்பிக்கப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்வதற்கு இணக்கம் காணப்பட்டிருந்தது. | ஒப்பந்ததாரரின் கிரயம், காலம் மற்றும் அத்தியாவசிய நலன்களை குறைப்பதற்காக ஒப்பந்த நிபந்தனைகளிலுள்ள வரையறைகள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | ஒப்பந்ததாரரால் செயலாற்றல் பிணை அவர்களின் செலவில் வழங்கப்பட வேண்டிய போதிலும், செயலாற்றல் பிணையை பெற்றுக்கொள்ளல் ஒப்பந்தத்தின் அளவிடைப் பத்திரங்களின் தனியானதொரு கொடுப்பனவு உருப்படியொன்றாக உள்ளடக்கி, அதற்காக ரூபா 85.64 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | மேல், கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் ஒப்பந்தப் பொதிகளின் அளவிடைப் பத்திரங்களின் செயலாற்றல் பிணைக்கான கொடுப்பனவு எனும் உருப்படி அகற்றப்பட்டுள்ளது. | நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | கொடுப்பனவு உருப்படிகள் தவறுதலாக வரைவிலக்கணப்படுத்தப்பட்டமையின் காரணத்தால் பொறியியலாளர் மதிப்பீடுகள், விலைக்கேள்வி ஆவணங்கள் மற்றும் அளவிடைப் பத்திரங்கள் ஆகியவற்றுக்கிடையில் உள்ள கட்டண முரண்பாடு காரணமாக இரு ஒப்பந்த பொதிகளுக்குரி 2020 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் செயற்திட்டத்திற்கு ரூபா 48.2 மில்லியனான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | ஆசிய அபிவிருத்தி வங்கியின் பெறுகைகள் வழிகாட்டல்களின் பிரகாரம், இந்த வேறுபாடு போட்டி அடிப்படையிலான அலகு (வீதம்) வேறுபடுத்தக்கூடிய எல்லையினை விஞ்சியிருக்கவில்லை என்பதும், மீளாய்வு செய்வதற்கு அல்லது குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியாது. | நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | ஒப்பந்த நிபந்தனைகளுக்கமைய அனைத்து இரசாயன ஆய்வுகூடங்கள், தளபாடங்கள் மற்றும் தையல் உபகரணங்கள் செயற்திட்டத்தின் இறுதியில் ஒப்பந்ததாரருக்கு மீளக் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக ரூபா 609 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தமையால் ஒப்பந்ததாரருக்கு மேலதிக நலனொன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. | இந்த சொத்துக்களின் கழிவுப் பெறுமதி – ஒப்பந்தத் தொகையிலிருந்து கழிக்கப்படுவதுடன், காலாவதியான மற்றும் பாவனைக்கு உடுக்க முடியாத பொருட்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சுவீகரிக்கப்பட்டால் அவற்றை சேகரித்து வைத்திருத்தல் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கும் பிரச்சினைக்குரிய விடயமாகும். | பாதகமான ஒப்பந்த நிபந்தனைகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | கிழக்கு மாகாணத்தின் ஆறு வீதிகள் புனரமைப்புச் செய்வததற்கு புதிதாக சேர்க்கப்பட்டுள்ளதுடன், அதற்காக செயற்திட்டத்தினூடாக ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் இணக்கப்பாடும் | கிழக்கு மாகாணத்தின் புதிதாக சேர்க்கப்பட்ட வீதிகள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் அங்கீகாரத்திற்காக | விடயப்பரப்பு மாற்றப்பட வேண்டியது கடன் வழங்கும் நிறுவனத்தின் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் இணக்கப்பாடு |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா என்பது மற்றும் அந்த ஒப்பந்தம் கையளித்தல் மற்றும் அங்கீகரித்தல் நடைமுறை கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே ஆகும். |
| (ஒ) | கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கமைய ஒப்பந்தப் பொதி கையளிக்கப்பட்டவுடன், உடனடியாக சிவில் பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும், 37 பொதிகளின் சிவில் பணிகளை ஆரம்பித்தல் ஒப்பந்தக் கையளிப்பு செய்யப்பட்ட நாள் முதல் 30 முதல் 203 நாட்கள் தாமதித்திருந்ததுடடன், அவ்வாறான தாமதத்திற்கான காரணங்கள் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கமைய செய்பட முடியாத சந்தர்ப்பத்தில், ஒப்பந்தத்தின் பொறியியலாளரால் ஒப்பந்த நிபந்தனைகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பந்தம் கையளிக்கப்பட்டவுடன் சிவில் பணிகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஓ) | செயற்திட்டத்தின் வசதிகள் நிர்வாக கையேட்டுக்கு மற்றும் 2019 மார்ச் 05ஆந் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9ஆம் பிரிவின் பிரகாரம், செயற்திட்ட மேவுகைக் குழு மற்றும் மாகாண இணைப்புக் குழு ஆகக் குறைந்தது காலாண்டு அடிப்படையில் நடாத்தப்பட வேண்டும். எவ்வாறான போதிலும், இந்த இரு குழுக்களும் இதற்கமைய உச்ச குழு உள்ளடக்கத்தினை பேணியிருக்கவில்லை. | செயற்திட்ட மேவுகைக் குழு மற்றும் மாகாண இணைப்புக் குழு அனைத்து மாகாணங்களிலும் நடைமுறைப்படுத்தப்படுவதுடன், உரிய முறையில் கூட்டங்கள் நடாத்தப்படுவதுடன், 2020 மார்ச் மாதம் முதல் கொவிட் தொற்றுநோய் நிலமை காரணமாக கூட்டங்கள் நடாத்துவதற்கு தடை ஏற்பட்டுள்ளது. | அனைத்து செயற்பாட்டுக் குழுக்களும் சிறந்த உள்ளடக்கத்தினை பேண வேண்டும். |
| (ஔ) | 1987 இன் 3 ஆம் இலக்க அரச ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், ரூபா 5 மில்லியனை விஞ்சும் அரச ஒப்பந்தங்களுக்காக அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும், உரிய விலைக்கேள்வியாளரின் தொழில்நுட்ப விலைக்கேள்வியினை மதிப்பீடு செய்யும் போது செயற்திட்டம் அந்த தேவைப்பாட்டினை கருத்திற்கொண்டிருக்கவில்லை. | 1987 இன் 03 ஆம் இலக்க அரச ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பது கருத்திற்கொள்ளப்பட்டதுடன், ஆசிய அபிவிருத்தி வங்கியின் வழிகாட்டியின் பிரகாரம், இது தகைமையின்மையாக கருதப்படவில்லை. | ஒப்பந்ததாரர் மற்றும் கையளிக்கப்பட்ட ஒப்பந்தம் அரச ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (க) | 2006 பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.13 (அ)(i) பிரிவின் பிரகாரம், விலைக்கேள்வி காப்பீட்டின் பெறுமதியின் ஒப்பந்தப் பெறுமதியில் 1 சதவீதம் முதல் 2 சதவீதம் வரையிலும் காணப்பட வேண்டிய போதிலும், விலைக்கேள்வியாளர்களால் வழங்கப்பட்ட விலைக்கேள்வி காப்பீட்டின் பெறுமதி வழிகாட்டியின் மேற்படித் தேவைப்பாட்டிற்கு இணங்கியிருக்கவில்லை. மேலும், வழிகாட்டியின் 7.8.4(ஆ) உப பிரிவின் பிரகாரம், பேதியளவான விலைக்கேள்வி காப்பீட்டு முன்வைக்கப்படாமை விலைக்கேள்வி மறுக்கப்படுவதற்கான முக்கியமான காரணியாக காணப்படுவதுடன், அதன் காரணமாக விலைக்கேள்வி மதிப்பீட்டு நடைமுறையின் சரியான தன்மை தொடர்பில் கணக்காய்வின் போது கேள்விக்குரியதாக காணப்பட்டது. | விலைக்கேள்விக் காப்பீட்டின் பெறுமதி மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 1% முதல் 2% இற்கு இடைப்பட்டதாக காணப்படுவதுடன், திட்டவட்டமான விலைக்கேள்வி காப்பீட்டுத் தொகையை பெற்றுத்தருமாறு ஒப்பந்ததாரர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து விலைக்கேள்வியாளர்களும் விலைக்கேள்வி ஆவணத்தின் பிரகாரம் காப்பீட்டினை வழங்கியுள்ளனர். காப்பீட்டின் காலம் அல்லது விலையில் மாற்றமொன்று காணப்படுமாயின் 7 நாட்களினுள் மீள ஒப்படைப்பதற்கான காலம் வழங்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் விலைகேள்வியாளரிடம் போதியளவான விலைக்கேள்வி காப்பீடு பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| (கா) | 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான நிகழ்ச்சித்திட்டத்தின் 70 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அவற்றுள் முக்கியமாக சிரேஷ்ட பொறியியலாளர், இணைப்பு பொறியியலாளர், செயற்திட்ட பொறியியலாளர், செயற்திட்டக் கணக்காளர் போன்ற அத்தியாவசியமான பதவிகளைக் கொண்டிருந்தமையால், செயற்திட்டத்தின் செயற்படுதன்மைக்கு நேரடியாக தாக்கம் செலுத்தும் தன்மை காணப்பட்டது. | இரண்டாவது வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் தொடர்ச்சியாவதுடன், இந்த இரு செயற்திட்டங்களுக்கும் ஒரே செலவின விடயத்தின் கீழ் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் பெறுகைகள், பொறியியல், நிதி, நிர்வாக கடமைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களால் இரண்டடாவது | செயலாற்றலினை உச்சப்படுத்துவதற்காக நிகழ்ச்சித்திட்டத்தின் பதவி வெற்றிடங்கள் தேவையானவாறு நிரப்பப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தினதும் கடமைகள் மேற்கொள்ளப்படுவதுடன், செயற்திட்டத்தின் செயற்திறனுக்கு தடை ஏற்பட்டிருக்கவில்லை. |

### 3.2.2 ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிகழ்ச்சித்திட்டத்தினால் தெற்கு, மத்திய, சபரகமுவ, வட மத்திய மற்றும் மேல் மாகாணத்தின் கழுத்துறை மாவட்டத்தின் 218.19 கிலோ மீட்டர்களை கொண்ட தேசிய நெடுஞ்சாலை மற்றும் 3,106.10 கிலோ மீட்டர்களுடைய கிராமிய வீதிகளை புனரமைப்பதற்கு எதிர்பார்த்த போதிலும், 2020 திசெம்பர் 31ஆந் திகதியளவில் 104.13 கிலோ மீட்டர் நீளமான தேசிய வீதிகள் மாத்திரம் ஒப்பந்தக் கையளிப்புச் செய்யப்பட்டிருந்தன. | ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் நலிவான செயலாற்றல் காணப்பட்ட 12 ஒப்பந்தப் பொதிகளின் உடன்படிக்கைகள் முடிவுறுத்தப்பட்டதுடன், 2020ஆம் ஆண்டினுள் அவற்றுள் 5 பொதிகளுக்காக ஒப்பந்தம் கையளிக்கப்பட்டுள்ளது. | நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்பத் திட்டத்திற்கமைய செயற்பட்டல் மற்றும் கால எல்லையினுள் இலக்குகளை அடைவதற்கு தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் தெற்கு, மத்திய, சபரகமுவ, வட மத்திய, வடமேல் மற்றும் மேல் மாகாணத்தின் கழுத்துறை மாவட்டத்தின் 2,203.87 கிலோ மீட்டர்களை கொண்ட கிராமிய வீதிகளின் புனரமைப்பு பணிகள் நிறைவு செய்யப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. மேலும், 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் | நலிவான செயலாற்றலை தொடர்ச்சியாக கொண்டிருந்த 12 ஒப்பந்தப் பொதிகளின் பணிகள் முடிவுறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. | நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்பார்த்த இலக்குகளை அடைவதற்கு தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளபடியான 12 ஒப்பந்தப் பொதிகளுக்குரிய 1,000.43 கிலோ மீட்டர்களையுடைய கிராமிய வீதிகளின் புனரமைப்புப் பணிகள் கைவிடப்பட்டிருந்தன. | | |
| (இ) | கைவிடப்பட்டிருந்த 12 ஒப்பந்தப் பொதிகளிடையே 05 ஒப்பந்தப் பொதிகளின் எஞ்சிய பணிகளை இந்த செயற்திட்டத்தினூடாக நிறைவேற்றுவதற்கு மீளாய்வாண்டினுள் மீளக் கையளிக்கப்பட்டிருந்ததுடன், ஆரம்ப ஒப்பந்த விலைகளுடன் ஒப்பிடும் போது மீள கையளிக்கப்பட்ட ஒப்பந்தங்களின் பெறுமதி ரூபா 5,007 மில்லியனால் அதிகரித்திருந்தது. இந்த நலிவான செயற்திட்ட முகாமைத்துவம் காரணமாக அரசாங்கத்திற்கு மேலதிக கிரயமொன்றை மேற்கொள்ள நேர்ந்தது. | அதற்கு பிரதானமாக ஒப்பந்ததாரரின் நலிவான செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் அந்தந்த பிரதேசங்களில் வீதி அபிவிருத்திற்ப பணிகள் ஆரம்பிக்கப்பட்டமையால் நிர்மாணப் பொருட்களின் விலைகளில் பாரிய அளவிலான அதிகரிப்பு ஏற்பட்டமை ஆகியன தாக்கமளித்திருந்தன. | நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்பார்த்த இலக்குகளை அடைவதற்கு தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், நிலவான செயற்திட்ட மேவுகை அலகுகள் தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | கைவிடப்பட்ட 04 ஒப்பந்தங்களின் எஞ்சிய பணியான 100,000 கி.மீ. கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினூடாக நிறைவு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது இணக்கப்பாட்டு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், ஆரம்ப ஒப்பந்த விலைகளுடன் ஒப்பிடும் போது அந்த ஒப்பந்தங்களின் பெறுமதி ரூபா 580.14 மில்லியனால் அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம், மற்றுமொரு செயற்திட்டத்தினூடாக அந்த ஒப்பந்தத்தை உரிய ஒப்பந்ததாரராலேயே மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுத்தமையால் தோல்வியடைந்த | நிலவும் விலைத் தளம்பலினைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கைகளை மற்றுமொரு ஒப்பந்ததாரருக்கு கையளிக்கும் போது இதனைவிட அதிக கூறுவிலைகள் முன்வைக்கப்படலாம். பெறுகை நடைமுறைக்கும் அதிக காலம் எடுப்பதனால் இந்த ஒப்பந்ததாரருக்கே வழங்குவதன் டூலம் முறையற்ற நிதி நலனொன்று வழங்கப்படவில்லை. | மேலதிக தாமதம் மற்றும் கிரயமொன்று இல்லாது நிர்மாணங்களை நிறைவு செய்வததற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், நலிவான செயற்திட்டங்களின் செயற்பாட்டு அலகுகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்ததாரரொருவருக்கு பொருத்தமற்ற நிதி இலாபமொன்று வழங்கப்பட்டிருந்தது. | | |
| (உ) | கைவிடப்பட்டிருந்த 12 ஒப்பந்தப் பொதிகளிடையே 03 ஒப்பந்தப் பொதிகள் 2019ஆம் ஆண்டின் போது நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன், 2020 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் எஞ்சிய பணிகளை மேற்கொள்வதற்காக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒரு பொதியொன்றின் பணிகளை மாத்திரம் மேற்கொள்ளுமாறு பல்வேறு சந்தர்ப்பங்களில் ஒப்பந்ததாரருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், இது தொடர்பில் எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்துகொள்வதற்கு தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | நிகழ்ச்சித்திட்டத்தினால் கைவிடப்பட்ட 12 ஒப்பந்தப் பொதிகளுக்குரிய ரூபா 2,668.47 மில்லியன் பெறுமதியான செயலாற்றல் பிணைகளை அறவிடுவதற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்ததாரர்களால் அவற்றை நிறுத்தும்படி நீதிமன்றக் கட்டளை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (எ) | பயன்படுத்தப்படாத கடனின் அடிப்படையில் மீளாய்வாண்டினுள் கடப்பாட்டுக் கட்டணங்களாக ரூபா 290.81 மில்லியன் சிக்கனமற்ற முறையில் கடனளிப்பு முகவரகத்திற்கு செலுத்தப்பட்டிருந்ததுடடன், 2020 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் திரண்ட கடப்பாட்டுக் கட்டணங்களாக ரூபா 1,471.26 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் கடப்பாட்டுக் கட்டணங்கள் அறவிடப்படுவதுடன், கடன் தொகையை ஒரே தடவையில் அறவிடுவதற்கான இயலுமை காணப்படவில்லை. கடன் உடன்படிக்கையை நிறைவு செய்வதற்கு இணங்கியுள்ள காலப்பகுதிக்கு முன்னர் கடன் உடன்படிக்கை நிறைவு செய்யப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் ஆரம்பத் திட்டத்தின் பிரகாரம், எதிர்பார்த்த பணிகளை உச்ச அளவில் நிறைவேற்றுவதற்காக மற்றும் வழங்குவதற்கு உத்தேசித்துள்ள மொத்தக் கடன் தொகையையும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | நிறுத்தப்பட்ட 08 ஒப்பந்தப் பொதிகளுக்குரிய பெற வேண்டிய தொழிலாரம்பிப்பு முற்பணம் ரூபா 1,830 மில்லியனை அறவிடுவதற்கு செயற்திட்டம் தவறியிருந்தது. அதன் பிரகாரம், கைவிடப்பட்ட 04 | ஒப்பந்ததாரரால் நீதிமன்றக் கட்டளை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டப் பொதிகளையும் உள்ளடக்கி 12 பொதிகளுக்குரிய 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான அறவிடப்பட்ட மொத்த தொழில் ஆரம்பிப்பு முற்பணம் ரூபா 2,793 மில்லியன் ஆகும். | | |
| (ஐ) | 2019ஆம் ஆண்டின் போது வடமேல் மாகாணத்தில் கைவிடப்பட்ட 05 ஒப்பந்தப் பொதிகளுக்குரிய அவசர பணிகளை நிறைவேற்றுவதற்காக மற்றும் வீதியை போக்குவரத்துக்கு உகந்த நிலைக்கு மாற்றுவதற்காக 02 ஏனைய செயற்பாட்டு ஒப்பந்தப் பொதிகள் ஊடாக ரூபா 158.2 மில்லியன் கிரயம் 2020 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | செயற்பாட்டு ஒப்பந்ததாரர்கள் இருவருக்கு ஒப்படைக்கப்பட்டு அவசர பணிகள் நிறைவு செய்யப்பட்டதுடன், அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் அந்த இரு நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவுச் சான்றிதழ்களினுள் உள்ளடங்கும். | மேலதிகமாக ஏற்பட்ட கிரயத்தை உரிய ஒப்பந்ததாரர்களிடம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

### 3.2.3 தெற்கு அதிவேக நெடுஞ்சாலைகள் விரிவாக்க செயற்திட்டம் - பொது

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | தெற்கு அதிவேக வீதியின் 46 கிலோ மீட்டர் பிரதேசத்தின் பின்னர், அதிவேக சாலையை பயன்படுத்துவோருக்கு சேவை வழங்கும் பிரதேசம் எதுவும் காணப்படடாமையால் வெலிபென்ன முதல் ஹம்பாந்தோட்டை வரையிலும் 176 கி.மீ. பயணிக்கும் பிரயாணிகளுக்கு சேவை வழங்குதல் பிரச்சினைக்குரியதாக காணப்பட்டது. | வங்கிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இரண்டாவது சேவைப் பிரதேசத்திற்காக நிதி வழங்குவதற்கு சீனாவின் EXIM வங்கி நிராகரித்துள்ளது. | தெற்கு அதிவேக வீதியின் நீடிப்பு செயற்திட்டத்திற்காக சேவைப் பிரதேசங்களை உருவாக்குவதற்கு தேவையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) தெற்கு அதிவேக வீதியின் நீடிப்பு செயற்திட்டத்தின் கட்டம் 3 மற்றும் 4 இல், அதிவேக வீதியின் சர்வதேச கடினத்தன்மை தொடர்பான குறிகாட்டி ஒரு கிலோ மீட்டருக்கு 1.5 – 2.3 மீட்டர் வீச்சில் காணப்பட வேண்டியதுடன், தொழில்நுட்ப பரிசோதனைகளுக்கமைய அந்த குறிகாட்டிகள் அடையப்பட்டிருந்த போதிலும், அதிவேக வீதியின் சில பகுதிகளில் வீதியின் மென்மையான தன்மை வீதியில் ஓட்டத்தில் ஈடுபடும் மோட்டார் வாகனங்களின் நல்ல ஓட்ட நிலமையை பேணுவதற்காக போதுமானதாக காணப்படவில்லை. | அமைப்புக்குறிப்பீடுகளின் பிரகாரம், அதிவேக வீதியின் IRI அளவீடுகளை ஏற்றுக்கொள்ளல் தொடர்பில் சிக்கலொன்றும் காணப்படவில்லை. | தொழில்நுட்ப அமைப்புக்குறிப்பீடுகளை தயாரிக்கும் போது வீதியில் பயணிக்கும் வாகனங்களின் ஓட்டத் தரத்தினை சான்றுபடுத்துவததற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.2.4 தெற்கு அதிவேக நெடுஞ்சாலைகள் விரிவாக்க செயற்திட்டம் - கட்டம் - 01

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) குறைபாடுகளை அறிவிக்கும் காலம் மற்றும் கடன் காலம் 2020 நவம்பர் 08ஆந் திகதியில் நிறைவடைந்த போதிலும், சாத்தியவளக் கற்கை அறிக்கையில் இடமாற்றலொன்றை நிர்மாணிப்பதற்கான இடமொன்றாக இனங்காணப்படாத கபுதுவ பிரதேசத்தின் உள்ளக இடமாற்றல் ரூபா 459.8 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிப்பதற்கு 2020 நவம்பர் 10ஆந் திகதிய தீர்மானத்தின் | இந்த இடமாற்றலை திட்டமிடல் கட்டத்தின் போது இனங்காணாது பின்னர் நிர்மாணித்தமையால் மேலதிக கிரயமொன்று ஏற்படவில்லை. | எதிர்கால செயற்திட்ட திட்டமிடலின் போது அனைத்து தேவைப்பாடுகளும் கருத்திற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. திட்டமிடல் கட்டத்தில் இந்த இடமாற்றல் இனங்காணப்பட்டிருந்தால் இதற்கா கிரயத்தினை குறைத்துக்கொள்ள முடியுமானதாக இருந்திருக்கும். | | |
| (ஆ) | குறைபாடுகளை அறிவிக்கும் காலத்தின் பின்னரும் புதிய இடமாறலை நிர்மாணிக்கும் விடயம் மாற்றப்பட்டமையால், 2020 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் மதியுரை சேவைகளுக்காக ரூபா 21.38 மில்லியன் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவத்திற்காக ரூபா 17.05 மில்லியன் மேலதிகக் கிரயமொன்றை மேற்கொள்ள நேர்ந்திருந்தது. இந்த நிர்மாணங்களுக்காக பாதீட்டு நிதியேற்பாடு அல்லது எதுவித நிதித் திட்டமும் 2021ஆம் ஆண்டு வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். | எதிர்பார்த்த காலத்தினுள் நிர்மாணங்களை நிறைவு செய்வதற்கு தேவையான நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | ஒப்பந்த ஆவணங்களில் மற்றும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படும் பொறியியல் அறிவுரைகளின் தெளிவற்ற விளக்கங்களின் காரணமாக நிலத்துளையிடல் (Piling) மற்றும நிலத்துளையிடல் அல்லாத மூலோபாய பணிகளுக்காக பயன்படுத்தப்படும் கொன்கிறீட் வகுப்பு தொடர்பில் அமைப்புக்குறிப்பீடுகள் மாற்றமடைந்தமையால், பிணக்கு தீர்ப்பனவுச் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் அது | ஒப்பந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனை இலக்கம் 20.2 இன் கீழ் தாபிக்கப்பட்ட பிணக்கு தீர்ப்பனவு சபையின் மூலம் வழங்கப்பட்ட தீர்மானம் மற்றும் ஒப்பந்த நிபந்தனை இலக்கம் 20.5 இன் கீழுள்ள சமாதான தீர்ப்பனவு நடைமுறையின் கீழ் இந்த கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கிரயத்திலான அதிகரிப்பொன்றாக மற்றும் கொடுப்பனவிலான தாமதமொன்று அல்லது தவறுதலொன்றுக்கான வட்டித் தொகையாக ஒப்பந்தததாரருக்கு ரூபா 129.11 மில்லியன் செலுத்த நேர்ந்திருந்தது. | | |
| (ஈ) | வசதிகளை வழங்கும் கட்டிடம் ரூபா 185 மில்லியன் கிரயத்தில் நிரந்தர அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த கட்டிடங்களின் உத்தேச பயன்பாடு தொடர்பில ஆரம்ப திட்டமொன்று தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், செயற்திட்டத்தின் இறுதியில் அந்த கட்டிடங்களின் உத்தேச பயன்பாடு தொடர்பில் உரிய திட்டமொன்று கணக்காய்வுத் திகதியான 2021 பெப்ரவரி 05ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த கட்டிடம் அதிவேக வீதி மேவுகை பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவிற்காக ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் பணிகளுக்காக நிரந்தர கட்டிடத்தினை நிர்மாணிக்கும் போது செயற்திட்டத்தின் நிறைவில் அந்த கட்டிடங்களில் உத்தேச பாவனை தொடர்பான ஆரம்ப திட்டமொன்று காணப்பட வேண்டும். |
| (உ) | செயற்திட்டத்தின் குறைபாடுகளை அறிவிக்கும் காலம் 2020 நவம்பர் 08ஆந் திகதி நிறைவடைந்த போதிலும், செயற்திட்டத்திற்காக சுதந்திர தீர்வை வரியின கீழ் இறக்குமதி செய்யயப்பட்ட உபகரணங்கள், இயந்திரங்கள், வாகனங்கள், பொருட்கள், எதிரிப்பாகங்கள் மற்றும் கணக்காய்வுத் திகதியான 2021 பெப்ரவரி 03ஆந் திகதி வரையிலும் 447 பட்டியல்கள் இறக்குமதி செய்யப்பட்ட ஐ.அ.டொலர் | 05 பட்டியல்களுக்குரிய பொருட்கள் மீள ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய பட்டியல்களில் உள்ளடங்கியுள்ள பொருட்கள் உரிய வரி செலுத்தி தேசிய ரீதியில் கைத்தவிர்ப்பு செய்வதற்கு ஒப்பந்த நிறுவனத்தால் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. அதற்குரிய விண்ணப்பங்கள் தற்போது நிதி அமைச்சின் பிசுக்கால் கொள்கைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | செயன்முறையை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

35,868,363 தொகையான மீள ஏற்றுமதி செய்யப்பட வேண்டிய பொருட்களின் மீள ஏற்றுமதி செய்யும் நடைமுறை நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.2.5 தெற்கு அதிவேக நெடுஞ்சாலைகள் விரிவாக்க செயற்திட்டம் - கட்டம் - 02

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிவேக வீதியினை பொது மக்களின் பாவனைக்காக திறக்கும் சந்தர்ப்பத்தில், சாத்தியவள கற்கைகள் அறிக்கையில் இடமாறல் நிர்மாணிக்கப்படும் இடமொன்றாக இனங்காணப்படாத பெந்திகம பிரதேசத்தில் தற்காலிக இடமாறலை நிர்மாணிப்பதற்காக ரூபா 100.83 மில்லியன் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | புதிய பெந்திகம இடமமாறலை நிர்மாணிப்பதற்காக நீண்ட காலம் எடுப்பதால், வீதியை பயன்படுத்துபவர்களுக்கு சேவை வழங்குவதற்காக பெந்திகம பிரதேசத்தில் தற்காலிக இடமாறலை நிர்மாணிப்பதற்காக வீதி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது. | எதிர்கால செயற்திட்ட திட்டமிடலின் போது அனைத்து தேவைப்பாடுகளும் கருத்திற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | தெற்கு அதிவேக வீதி நீடிப்பு செயற்திட்டத்தின் மூன்றாம் கட்டத்தினூடாக இறக்குமதி செய்யப்பட்டிருந்த மற்றும் செயற்திட்டத்தின் இறுதியில் ஏற்றுமதி செய்யப்பட வேண்டிய ஐ.அ.டொலர் 10,363,385 பெறுமதியான உபகரணங்கள் மீள ஏற்றுமதி செய்யப்படாதும் வரி செலுத்தப்படாமலும், ஒப்பந்ததாரரால் நிறுத்தி வைக்கப்பட்டமையால் ஒப்பந்ததாரருக்கு அசாராதணமான இலாபம் கிட்டியிருந்தது. | தெற்கு அதிவேக வீதி செயற்திட்டம் - கட்டம் 03 இற்காக இறக்குமதி செய்யப்பட்ட உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் தெற்கு அதிவேக வீதி செயற்திட்டம் - கட்டம் 02 இற்கு பயன்படுத்தப்பட்டமையால் தெற்கு அதிவேக வீதி செயற்திட்டம் - கட்டம் 02 இன் இல்லாதாக்கப்பட்ட செயன்முன்னேற்றத்தினை மீள அடைந்துகொள்ள ஒப்பந்ததாரருக்கு இயலுமானதாக இருந்தது. | மீள் ஏற்றுமதி நடைமுறையை நிறைவு செய்வதற்கு அல்லது உரிய வரியை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2.6 தெற்கு அதிவேக நெடுஞ்சாலைகள் விரிவாக்க செயற்திட்டம் - கட்டம் - 03

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயலாற்றல் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளும் வரையிலும் ஒப்பந்ததாரரால் எஞ்சியுள்ள குப்பைக கூழங்கள், கழிவுகள் மற்றும் தற்காலிக பணிகளின் கழிவுகள் வேலைத்தளத்திலிருந்து அகற்றப்பட வேண்டிய போதிலும், வளவே ஆற்றின் குறுக்காக மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களுக்காக பயன்படுத்தப்பட்ட தற்காலிக பாலங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த இரும்பு பட்டிகள் மற்றும் விட்டங்கள் அகற்றப்பட்டிராமையால் இந்த நிலமை ஆற்றின் நீர் வடிந்தோடுவதற்கு தடையொன்றாக காணப்பட்டது. | மாவட்ட இணைப்புக் கூட்டத்தின் போது வளவே ஆற்றின் குறுக்காக கட்டப்பட்ட தற்காலிக பாலத்தினை வைத்திருக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர. | ஆற்றின் நீர் வடிந்தோடுவதற்கு தடையொன்று ஏற்படாத வகையில் கழிவுகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2.7 தெற்கு அதிவேக நெடுஞ்சாலைகள் விரிவாக்க செயற்திட்டம் - கட்டம் - 04

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்திற்காக ரூபா 106 மில்லியன் பெறுமதியுடனான கட்டிடங்கள் நிரந்தர அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் இறுதியில் அந்த கட்டிடங்களின் பயன்பாடு தொடர்பில் அடிப்படைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.. பின்னர், செயற்திட்டப் | வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பல்வேறு தேவைப்பாடுகளுக்காக கட்டிடங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. எஞ்சிய கட்டிடடங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இயலளவு அபிவிருத்தி நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்ததுடன், | செயற்திட்டத்தின் பணிகளுக்காக கட்டிடங்களை நிர்மாணிக்கும் போது, செயற்திட்டத்தின் நிறைவில் அந்த கட்டிடங்களின் உத்தேச பாவனை தொடர்பான அடிப்படைத் திட்டமொன்று காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணிப்பாளரால் 2019 ஒக்தோபர் 19ஆந் திகதி அந்த வளாகம் அதிகாரசபையின் இயலளவு மேம்படுத்தல் நிலையமொன்றாக பயன்படுத்துவதற்கு முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2021 சனவரி 08ஆந் திகதி வரையிலும் பணிப்பாளர் சபை அதனை அங்கீகரித்திருக்கவில்லை. | அதனை அங்கீகரிக்கும் நடைமுறை இடம்பெறுகின்றது. | |
| (ஆ) | செயற்திட்டத்தின் ரூபா 509 மில்லியன் மதிப்புடைய மூன்று பிணக்குகள் தீர்ப்பனவுக்காக தற்போது வரையிலும் திறந்து காணப்பட்டதுடன், செயற்திட்டத்தின் குறைபாடுகளை தீர்ப்பதற்கு கடப்பாட்டுக் காலம் நிறைவடைந்து 06 மாதங்கள் கடந்துள்ள போதும் ஒப்பந்ததாரரின் உரித்துக்கோரலை நிறைவு செய்ய முடியாதிருந்தது. | உரிமை கோரல் பிணக்குகள் மூன்றில் இரண்டுக்காக ஒப்பந்ததாரரால் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது இதற்கு ஒரு வருடத்திற்கு முன்னர் ஆகும். அவற்றுள் ஒரு உரித்து கோரல் பிணக்குக்கான அதிருப்தி அறிவிக்கப்பட்டது 2020 ஒக்தோபர் 13ஆந் திகதியாகும். | அதிருப்தி தொடர்பான அறிவித்தல் வெளியிடப்பட்ட பின்னர் பிணக்கு தீர்த்தல் ஆரம்பிப்பதற்கான திட்டவட்டமான காலப்பகுதியொன்று விசேட நிபந்தனைகளுக்குள் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (இ) | விலகல் கட்டளையொன்றின் கீழ் மத்தல மற்றும் மாகம்புர இடமாற்றல்களில் கட்டணம் அநவிடும் வாயில்களுக்காக மேலதிக எடையிடு பாலங்கள் இரண்டினை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,873,300 செலவிடப்பட்டிருந்த போதிலும், அவை நிர்மாணிக்கப்பட்டு 10 மாதங்கள் கடந்திருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2021 சனவரி 06ஆந் திகதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மத்தல மற்றும் மாகம்புர இடமாற்றல்களில் இரு பாலம் தராசுகள் நிர்மாணிக்கப்பட்டமைக்கான காரணம், அவை விமான நிலையம் மற்றும் துறைமுகங்களின் அருகில் உள்ளமையால் அதிக பாரம் ஏற்றப்பட்ட வாகனங்களை பரீட்சிக்கும் நோக்கத்திற்காகவே ஆகும். | அனைத்து கட்டுமானங்களையும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | பேரூந்து மற்றும் புகையிரத போக்குவரத்து முனையத்தை நிர்மாணிப்பததற்காக ரூபா 3,000 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த முனையத்தை நிர்மாணிப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பேரூந்து மற்றும் புகையிரத போக்குவரத்து முனையத்தை நிர்மாணிப்பததற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் இணக்கப்பாடு வழங்கப்பட்டிராமையால், அது நடைமுறைப்படுத்தப்படடாததுட | அளவிடைப் பத்திரம் உரிய மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| குறித்த முன்மொழிவை இரத்துச்செய்யப்பட்டிருந்ததுடன், செயற்திட்டத்தின் ஏனைய பணிகளுக்காக அந்த சேமிப்பை பயன்படுத்தும் நோக்கில் திருத்தப்பட்ட அளவிடைப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | ன், அந்த நிதி ஏனைய பணிகளில் ஈடுபடுத்தப்படாது செயற்திட்டத்தின் இறுதியில் எஞ்சியிருந்தது. | |

### 3.2.8 மத்திய அதிவேக நெடுஞ்சாலைகள் செயற்திட்டம் - கட்டம் - 03

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013ஆம் ஆண்டு முதல் இதுவரையிலும், சிவில் வேலை கையளிப்புச் செய்யப்பட்டிராததுடன், செயற்திட்ட முகாமைத்துவ அலகிற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் ரூபா 833.83 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | மத்திய அதிவேக பாதையின் I பகுதிக்காக ரூபா 222 மில்லியன் தொகையும் II ஆம் பகுதிக்காக ரூபா 51 மில்லியனும் III ஆம் பகுதிக்காக ரூபா 560 மில்லியனுமாக செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்காக செலுத்தப்பட்டுள்ளது. | நிர்மாணங்களை துரிதப்படுத்துவதற்கு உரிய அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும். |

### 3.2.9 மத்திய அதிவேக நெடுஞ்சாலைகள் செயற்திட்டம் - கட்டம் - 04

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016ஆம் ஆண்டு முதல் இதுவரையிலும் நிதி வழங்கிய முகவராண்மையொன்று இல்லாத சிவில் வேலை ஒப்பந்தங்களை கையளிக்காது செயற்திட்ட முகாமைத்துவ அலகிற்காக ரூபா 352.72 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | சம்பளம் மற்றும் படிகளுக்காக ரூபா 252.8 மில்லியனும், வாகனங்களின் பராமரிப்புக்காக ரூபா 52.1 மில்லியனும், காணிகளை சுவீகரிப்பதற்காக ரூபா 9.4 மில்லியனும், கட்டிடங்களின் வாடகை மற்றும் பராமரிப்பிற்காக ரூபா 10.73 மில்லியனும் மின்சாரம், நீர், தொலைபேசி போன்ற பயன்பாட்டு செலவினங்களுக்காக ரூபா 27.7 மில்லியனும் செலுத்தப்பட்டுள்ளது. | நிர்மாணங்களை துரிதப்படுத்துவதற்கு உரிய அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும். |

### 3.2.10 வெளிப்புற சுற்றுவட்ட நெடுஞ்சாலை செயற்திட்டம் - கட்டம் III

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வேலை அளவிடைப்பத்திரங்களில் உள்ளடங்கியுள்ள ரூபா 2,506 மில்லியன் பெறுமதியான 64 உருப்படிகள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டிராததுடன், ரூபா 3,721 மில்லியன் பெறுமதியான மேலும் 11 உருப்படிகள் 50 சதவீதத்திற்கும் குறைவான அளவில் நிறைவு செய்யப்பட்டிருந்தன. அவ்வாறே மதிப்பீடு செய்யப்பட்டிருந்த மேலும் சில உருப்படிகளின் உள்ளபடியான கிரயம் 51 சதவீதம் முதல் 2,353 சதவீதத்திற்கு இடைப்பட்ட அளவில் விலகளடைந்திருந்தது. | இந்த வேறுபாட்டுக்கு பல்வேறு விடயங்கள் தாக்கம் செலுத்தியிருந்தன. | மொத்தக் கிரய மதிப்பீட்டினை மேற்கொள்ளும் போது அனைத்து செலவினங்களும் கருத்திற்கொள்ளப்பட்டு மிகவும் சரியானதாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | அதிவேக வீதியை நிர்மாணிக்கும் பணிகள் 85 சதவீதம் நிறைவு செய்யப்பட்டுள்ள போது, 2019 நவம்பர் 09ஆந் திகதி அவசரமாக வீதி பொதுமக்களுக்காக திறந்து வைக்கப்பட்டது. இந்த செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கை 2019 திசெம்பர் 03ஆந் திகதி திறந்து வைக்கப்பட்டிருந்தமையால் செயற்திட்டத்தின் எஞ்சிய நிர்மாணப் பணிகளை நிறைவு செய்ய முடியாமை மற்றும் நிர்மாணக் கம்பனிக்கு செலுத்த வேண்டிய ரூபா 965 மில்லியன் தொகை தீர்ப்பனவு செய்ய முடியாத நிலைக்கு உள்ளாகியிருந்தது. | மீதி பணிகள் தொடர்பான மதியுரையாளர்களின் மதிப்பீட்டுக்கமைய 2019 நவம்பர் 30ஆந் திகதி வரையிலும் பௌதீக செயன்முன்னேற்றம் 95.6 சதவீதமானது ஆகும். | செயற்திட்ட மதிப்பீட்டினை நடைமுறைப்படுத்தும் போது கடன் உடன்படிக்கை காலத்தினுள் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2.11 அதிவேக துறைமுக நுழைவாயில் செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இந்த செயற்திட்டம் 2016 ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2019 சனவரி 17ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் 2025ஆம் ஆண்டு நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் பல்வேறு பிரதான பணிகள் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் தாமதமாகியிருந்தது. வீதியை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தினை கையளிக்கும் கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 08 மாதங்களின் பின்னர், அதாவது 2019 ஆகஸ்ட் 30ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக எதிர்பார்த்த செயன்முன்னேற்றம் 53 சதவீதமாக காணப்பட்ட போதிலும், 23 சதவீதம் மாத்திரம் அடையப்பட்டிருந்தது. அவ்வாறே ரூபா 10,382 மில்லியனில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த 08 பணிகள் மீளாய்வாண்டின் போது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதற்காக வெளிநாட்டு கடன்களுக்காக 2020ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடு ரூபா 5,858 மில்லியனில் 73 சதவீதத்தினை பயன்படுத்த முடியாதிருந்தது. | 2016 ஒக்தோபர் மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்ட போக்குவரத்து செயற்திட்ட முன்னாயத்த வசதிகள் (டீபீஎப்) எனும் பெயருடைய ஏடீபீ தொழில்நுட்ப உதவி கடனின் கீழ் திட்டங்கள் மற்றும் விலைக்கேள்வி ஆவணங்களை தயாரித்தல் மற்றும் செயற்திட்டத்தின் விலைக்கேள்வி கோரல் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டது.<br><br>செயற்திட்டங்கள் தாமதமடைவதற்கு ஒப்பந்ததாரரின் நலிவான செயற்திறன் பிரதான காணமாக அமைந்துள்ளது. | தாமதித்த நிர்மாண ஒப்பந்தங்களை துரிதப்படுத்தி எதிர்பார்த்த செயன்முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், வருடாந்த பாதீட்டினூடாக ஒதுக்கப்பட்ட நிதியை முழுமையாக பயன்படுத்தக்கூடிய வகையில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்த வேண்டும். |

### 3.2.12 தெற்கு வீதி இணைப்புகள் செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இந்த செயற்திட்டத்தின் 2 பொதிகளின் கீழ் ரூபா 3,064 மில்லியன் கிரயத்திற்கு ஆரம்பிக்கப்பட்டிருந்த வீதி நிர்மாணப் பணிகள் அந்த நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் ரூபா 1,573 மில்லியன் அல்லது மொத்தக் கிரயத்தில் 51 சதவீதமான விலகல் கட்டளையின் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்டு ஆரம்ப நிர்மாணப் பணிகள் மாற்றம் செய்யப்பட்டிருந்த போதிலும், 2006 பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.13.4 பிரிவின் பிரகாரம் அதற்காக உரிய அங்கீகாரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. | இந்த செயற்திட்டம் 2 பொதிகளின் கீழ் விலகல் கட்டளைகளின் கீழ் அதிகரிக்கும் கிரயத்திற்குரிய அங்கீகாரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் உரிய அங்கீகாரங்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

### 3.2.13 பாதெனிய அநுராதபுரம் வீதியை மேம்படுத்தும் செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2012 நவம்பர் 30ஆந் திகதி நிர்மாணங்கள் நிறைவு செய்யப்பட்டிருந்த செயற்திட்டத்தின் கலைத்தல் கணக்குகள் 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக தயாரிக்கப்பட்டிருந்ததுடன், காணிகளை சுவீகரிப்பதற்காக தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட வேண்டிய ரூபா 9.6 மில்லியன் செலவினத்திற்கு தேவையான | செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான நிதி அறிக்கைகளை தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் அதற்குரிய காணிகளின் நட்டஈடு மற்றும் வட்டி செலுத்த வேண்டியதாக உள்ளதா என்பது தொடர்பில் பிரதேச அலுவலகங்களில் விசாரித்துள்ள போதும், அதற்குரிய திட்டவட்டமான தொகையொன்றை கண்டறிய முடியாமையால் 2020 திசெம்பர் | காணிகளை சுவீகரிப்பதற்காக தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட வேண்டிய செலவினங்களுக்காக தேவையான நிதியேற்பாடு, அந்த கலைத்தல் கணக்குகளினுள் காண்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதியேற்பாடுகள் அந்த கலைத்தல் கணக்கினுள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 31ஆந் திகதியில் உள்ளபடியாக தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட வேண்டிய செலவினங்கள் காணப்படுகின்றதா எனன்பதைக் காண்பிக்க முடியாதிருந்தது. | |

### 3.2.14 தேசிய வீதிக் கட்டமைப்பின் மண்சரிவு ஆபாயத்தினை தடுக்கும் செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது ஒப்பந்ததாரர்களினால் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள், செயற்பாட்டு அலுவலகங்களாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள், மற்றும் கணினி உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள, இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் செயற்பாட்டு உபகரணங்களின் பெறுமதியான ரூபா 369.6 மில்லியன் சிவில் பணிகளின் கிரயத்தினுள்ளேயே உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், அது பிரதான நடைமுறை வேலைகளிலிருந்து வேறுபடுத்தப்பட்டு இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டம் 2021ஆம் ஆண்டு நிறைவடைவதுடடன், தற்போது அதற்கான இறுதிக் கணக்குகள் கணக்காய்விற்காக தயாரிக்கப்பட்டவாறு உள்ளது. அதன் போது அந்த பெறுமதியை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த நடைமுறையல்லாத சொத்துக்கள் தனியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தினால் பராமரிப்பு பிரிவொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 23.08 மில்லியன் பெறுமதியான பராமரிப்பு உபகரணங்கள், அந்த அலகு இதுவரையிலும் ஆரம்பிக்கப்படாத காரணத்தால் ஒவ்வொரு இடங்களிலும் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. | இந்த செயற்திட்டத்தினூடாக பதுளை 2nd Mile Post இல் நிறுவப்பட்ட மண்சரிவு முகாமைத்துவ அலகு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாணத்திற்கு பொறுப்பான பணிப்பாளர் (ஊவா) மற்றும் நிறைவேற்று பொறியியலாளர் - பதுளை இற்கு கிரமமாக குறித்த உபகரணங்கள் ஒப்படைக்கப்பட்டன. | பராமரிப்பு உபகரணங்கள் உரிய பணிகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.3 உள்நாட்டு நிதியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் அதிவேக வீதி வலையமைப்பினுள் பிரவேசிக்கும் இயலுமையை அதிகரிக்கு நோக்குடன் 100,000 கி.மீட்டர் நீளமான வீதியின் மாற்று வழிகள் மற்றும் கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டத்தின் மூலம் மீளாய்வாண்டின் போது 15,000 கி.மீட்டர் நீளமான வீதியை அபிவிருத்தி செய்து நிறைவு செய்வததற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், அவற்றில் 1,070 கி.மீட்டர் நீளமான வீதியை உள்ளடக்கி 852 வீதிகள் மாத்திரம் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், இந்த செயற்திட்டத்தின் செயலாற்றல் 7.1 சதவீதமான குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | மூலப்பொருள் பற்றாக்குறை, இயந்திரம் மற்றும் பொறிகளின் பற்றாக்குறை, பணம் செலுத்துவதிலான தாமதங்கள், கொரானா தொற்றுநோய் நிலமை காரணமாக 2020ஆம் ஆண்டு நிறைவடையும் போது 1070 கிலோ மீட்டர்கள் நீளமான வீதியின் நிர்மாணப் பணிகள் மாத்திரம் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், 4,518 கி.மீட்டர் நீளமான வீதியின் பணிகள் மேற்கொள்ளப்பட்டவாறு காணப்பட்டது. | நிர்மாண ஒப்பந்தங்களை துரிதப்படுத்தி எதிர்பார்த்த செயன்முன்னேற்றத்தை அடைந்துகொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 04ஆந் திகதிய அரச செலவின முகாமைத்துவம் மற்றும் நிதி ஒழுக்கத்தினை பேணிச் செல்லல் எனும் தலைப்பிடப்பட்டு வெளியிடப்பட்ட 07/2019 ஆம் இலக்க வரவு செலவுத் திட்டச் | அமைச்சிற்கு சொந்தமான 06 வாகனங்கள் கைத்தவிரிப்பிற்காக இனங்காணப்பட்டிருந்ததுடன், அந்த வாகனங்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. அவற்றுள் ஒரு வாகனம் 2021-01-10ஆந் திகதி கைத்தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பில் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் பிரகாரம், செலவின அலகுகளுக்கு வழங்கப்பட்டிருந்த வளங்களை பயன்படுத்தாது வைத்திருப்பதன் மூலம் ஏற்படும் கிரயத்தினை தடுப்பதற்காக அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சிற்கு சொந்தமாகவுள்ள வாகனங்களில் பயன்படுத்தக்கூடிய நிலையிலுள்ள 11 வாகனங்கள் பல வருடங்களாக பாதுகாப்பற்ற முறையில் தரித்து வைக்கப்பட்டிருந்தது. | ஏனைய வாகனங்களையும் கைத்தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், புதிய வாகனங்கள் நீண்ட காலமாக இறக்குமதி செய்யப்படாமையால் எதிர்காலத் தேவைக்காக அந்த வாகனங்களை பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு பின்னர் தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், அந்த வாகனங்களை பழுமுபார்த்து ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு திறைசேரியின் செயலாளரின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. | |
| (ஆ) | அமைச்சிற்கு சொந்தமான KQ - 0690 ஆம் இலக்கமுடைய ரூபா 16 மில்லியன் பெறுமதியான வாகனம் 2020 நவம்பர் 18ஆந் திகதி முதல் மகநெகும வீதி நிர்மாணிக்கும் இயந்திரங்கள் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தன. | வாகனத்தை ஓட்ட நிலைக்கு கொண்டு வருவதற்காக கருத்திற்கொள்ளப்பட வேண்டிய பாரிய அளவிலான பழுதுபார்த்தல்களுக்காக அமைச்சிடமுள்ள நிதியேற்பாடுகள் வரையறுக்கப்பட்டிருந்தமையால், வாகனம் வெறுமனே தரித்து வைக்கப்படுதல் பொருத்தமற்றது என்பதால் பழுதுபார்க்கப்பட்டு பயன்படுத்துவதற்காக உரிய கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ளது. | மேற்படி |
| (இ) | மீளாய்வாண்டினுள் ரூபா 3,379,991 பெறுமதியுடைய 102 அலுவலக உபகரண விடயங்கள் கிராமிய வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த சொத்துக்களை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய மதிப்பீட்டுக் குழுக்கள் நியமிக்கப்பட்டு, குழுவின் பரிந்துரைக்கமைய ரூபா 2,515,881 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் 2021.04.23ஆந் திகதி விநியாகிக்கும் கட்டளையில் கிராமிய வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டது. இதன் பெறுவனவுக் கட்டளை கிடைக்கப்பட்டதன் பின்னர் எதிர்காலத்தில் புத்தகங்களிலிருந்து கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். | மேற்படி |

## 3.5 அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880(i) மற்றும் அரச உத்தியோகத்தர்களின் பிணைகள் கட்டளைச் சட்டத்தின் 612ஆம் அதிகாரத்தின் பிரகாரம், அமைச்சின் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் 02 பேர் மாத்திரம் பிணை வைப்புச் செய்திருந்தனர். | நிதிப்பிரமாணம் 880(1) மற்றும் அரச உத்தியோகத்தர்களின் பிணைகள் கட்டளைச் சட்டத்தின் 612ஆம் அதிகாரத்தின் பிரகாரம், அமைச்சின் இரு உத்தியோகத்தர்கள் மாத்திரம் பிணை வைத்துள்ளனர். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. நிலையேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்கான இலக்குகளுக்காக ஆயத்தமாதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடக்கப்பட்டிராத போதிலும், வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் 03 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்குரிய இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் மாத்திரம் குறிப்பிடப்பட்டு, அந்த குறிகாட்டிகளுக்குரிய செயன்முன்னேற்றம் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | 2020ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்ட நோக்கங்கள் மற்றும் அதற்குரியதாக இனங்காணப்பட்டிருந்த இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளை அடைவதற்காக நடைமுறைப்படுத்தப்பட் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் பௌதீக செயன்முன்னேற்றம் வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் திட்டவட்டமமாக குறிப்பிடப்பட்டுள்ளது. | வருடாந்த நிகழ்ச்சித்திட்டத்தில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டவட்டமாக உள்ளடக்கப்பட்டு, அவற்றை அடைதல் தொடர்பில் உரிய முறையிலான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

### 5.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதன செலவினம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இரட்டை அடிப்படையிலான பதவியொன்றான 100 அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வெற்றிடமொன்று நிலவிய போதிலும், அமைச்சின் செயற்பணிக்கு நேரடியாக தாக்கம் செலுத்தாத வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிராந்திய அலுவலகங்களின் கடமைகளுக்காக அமைச்சிற்கு இணைப்பு செய்யப்பட்ட 79 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டு, அமைச்சு அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 43,813,443 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட 28 உத்தியோகத்தர்கள் மற்றும் செயற்திட்டங்களிலிருந்து 02 உத்தியோகத்தர்களும் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம், கருத்திற்கொள்ளும் போது பதவியணியை அங்கீகரிக்கும் போது சேவையின் தேவைப்பாடு தொடர்பில் பொருத்தமான மதிப்பீமொன்று மற்றும் சேவைத் தேவைப்பாட்டு பரிந்துரைகள் பொருத்தமற்று மேற்கொள்ளப்பட்டிருந்தன. | அரச கொள்கைத் தீர்மானத்தின் அடிப்படையில் 2013ஆம் ஆண்டின் போது 365 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அமைச்சிற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன், அதற்கான பதவியணி அங்கீகாரமும் கிடைத்துள்ளது. இந்த எண்ணிக்கையை குறைப்பதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள்களுக்கமைய, தற்போது அந்த எண்ணிக்கை 220 வரை குறைத்துக்கொள்ள முடியுமானதாகியுள்ளது. | அமைச்சின் உண்மையான ஊழியர் தேவைப்பாடு புலப்படும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்துதல் மற்றும் இதற்கரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 5.2 மனிதவள அபிவிருத்தியை உரிய முறையில் திட்டமிடாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது பிரதானமாக 30 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்ட 03 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பதவியணியின் 196 உத்தியோகத்தர்களிடையே 03 பேர் மாத்திரம் மீளாய்வாண்டின் போது பங்குபற்றியிருந்தனர். | 2020ஆம் ஆண்டினுள் எதிர்பாராத வகையில் நாட்டினுள் பரவிய கொவிட் - 19 தொற்றுநோய் காரணமாக ஊழியர்களை ஒன்றுகூட்டுதல், வரவழைத்தல் போன்றவற்றை மேற்கொள்ள முடியாமையால் அந்த வருடத்திற்கான பயிற்சி திட்டத்தினை உரிய முறையில் நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது. | வருடாந்தப் பயிற்சித் திட்டத்தினை தயாரிக்கும் போது ஒவ்வொரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக மதிப்பிடப்பட்ட கிரயம், பங்குபற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை, நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்படும் கால எல்லை தொடர்பில் உரிய முறையில் திட்டமிட வேண்டும். |